புதிய சகாப்தத்தின் புதிய முறைகள்

அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார். (பிர 3:11) என்று சாலோமோன் ஞானி விளம்புகிறார். காலங்கள் மாறும் போது சகாப்தங்களில் காணப்படும் மாறுதலை உற்றுக் கவனிக்கத் தவறுபவர்கள் தேவ செய்தியையும், தேவ நடத்துதலையும் புரிந்து கொள்ள முடியாதவர்களாக மாறி விடுவார்கள்.

உதாரணமாக, மோசேயின் சகாப்தம் (Dispensation) வித்தியாசமானது. யோசுவாவின் சகாப்தம் வித்தியாசமானது. இந்த வித்தியாசத்தை கொஞ்சம் கவனித்து அறிந்தால் தேவன் செய்து வருவதைப் புரிந்து கொள்வதோமு, அவரின் திட்டங்களை செயல்படுத்துவதிலும் நாம் சிறந்து நிற்க முடியும்.

ஐந்த காரியங்களை மாத்திரம் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றன். ஜனங்கள் செங்கடலின் ஓரத்திற்கு வந்த போது கலங்கி முறையிட்டனர். தடுக்கும் செங்கடலையும், விரட்மும் சத்துருவையும், எழும்பி நிற்கும் அலைகளையும் கண்டு மிரண்டு போயினர். பயம் அவர்களைப் பிடித்து ஆட்ட, எகிப்தின் வாழ்க்கையே மேலானது என்று நினைக்க வைத்துவிட்டது. அடிமை வாழ்வு தங்களுக்கு பாதுகாப்பாக இருந்தது என்று முறையிடத் தொடங்கினர். ஆனால் மோசேயே “கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார். நீங்கள் சும்மாயிருப்பீர்கள். (யாத. 14:16) என்று அவர்களை தைரியப்படுத்தினான். கர்த்தரின் கட்டளையின் படியே செங்கடலை பிளந்து விட்டு ஜனங்களைத்தப்புவித்தான். (யாத.14:16) மோசே தன் கையை நீட்டினான். ஜலம் பிரிந்து போயினர். இதைக் கண்ட இஸ்ரவேலர் மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள். (யாத்.14:31) மோசே தலைமை தாங்கி காலத்தில் இப்படித்தான் நடந்தது.

ஆனால் இதைப்போலொத்த ஒரு காரியம் யோசுவாவின் நாட்களில் நடக்கிறது. வெள்ளம் புரண்டோடும் யோர்தான். கரைகள் தெரியவில்லை. ஜனங்களோ, சுதந்தரிக்க வேண்டிய தேசத்தில் கனிகளை ருசிக்க அறிந்தவர்களாய் தேவ வாக்குத்தத்தம் நிறைவேற துடித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் யோர்தான் இப்போது அவர்களுக்கு ஒரு சவால். இந்நிலையில் மோசேயின் காலத்தில் நடந்தது போலத் தான் நடக்க வேண்டும் என்று எண்ண வாய்ப்பு உண்டு. மோசேயின் கோலும் உண்டு. ஆனால் மாறாக தேவன் யோசுவாவைப் பார்த்துச் சொல்லும் காரியம் வித்தியாசமானது.

..ஆசாரியரின் உள்ளங்கால்கள் யோர்தானின் தண்ணீரில் பட்ட மாத்திரத்தில்…(யோசுவா 3:13) அது பரிந்து வழி விடவேண்டும். தேவனுடைய பெட்டியை சுமக்கும் 4 ஆசாரியர்கள் தான் இந்த வேலையை விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்போகிறார்கள். (Instead of a single Leader, It is a collective leadership) ஒரு மனிதன் என்பது மறைந்து பலர் இணைந்த செயல்பாட்டை குறிக்கிறது. இந்த சகாப்தத்தின் ஆரம்பம் கூட்டுமுயற்சி என்று தேவன் கற்றுக் கொடுக்க முயற்சிக்கிறார். விளைவு, வெற்றி மாத்திரம் அல்ல. யோசுவா இதை நன்கு அறிந்து கொண்டவனாக எதிரிகளின் ஐந்து இராஜாக்கள் மேல் வெற்றி கண்ட போது யுத்த மனுஷரின் அதிபதிகளை நோக்கி “நீங்கள் கிட்ட வந்து உங்கள் கால்களை இந்த ராஜாக்களுடைய கழுத்துகளில் வையுங்கள்” என்றான் (யோசுவா 10:24) அப்படியே அவர்களும் செய்தார்கள். என்ன பாடம் கற்றுக கொண்டார்கள்? இது தனி மனிதனின் வெற்றி அல்ல. கூட்டு முயற்சியில் ஏற்பட்ட கூட்டு வெற்றி. இன்றைய ஊழியத்தின் வெற்றியும் இப்படித்தான் நடைபெற வேண்டும். சகாப்தம் மாறுகிறது. தனி மனிதர்களை தேவன் உபயோகிப்பது நல்லதுதான். ஆனால் தேவன் செயல்படும் முறையின் மாற்றத்தைப் புரிந்து கொண்டோர் இதனால் அகமகிழ்வர். ஆனந்த முழக்கமிடுவர். ஊழியத்திலும் அது தனி மனிதனின் வெற்றி அல்ல. அது கூட்டு

முயற்சி. போவோரும், அனுப்புவோரும் இணைந்ததினாலும் போவோரின் மத்தியில் (அல்லது ஸ்தாபனங்கள் மத்தியில்) காணப்படும் ஒற்றுமை உணர்வும் கூட்டு முயற்சியுமே தேவன் இன்று செய்யும் காரியம். அறிந்து கொண்டால் நாமும் ஆர்ப்பரிக்கலாம்.

இரண்டாவதாக மோசேயின் குடும்ப வாழ்க்கை மற்றவர்களுக்கு சவாலாக இருந்ததில்லை. ஆனால் யோசுவாவோ... நானும் என் வீட்டாரும் கர்த்தரையே சேவிப்போம். யோசு 24:15 என்று முழங்குகிறார். குடும்ப ஜீவியம் மிகவும் முக்கியம் என்பதை வலியுறுத்தும் பிரசங்கங்கள் பெருகி வரும் நாட்கள் இது. சத்துரு குறிவைக்கும் இந்த குடும்ப வாழ்க்கையின் முக்கியத்துவம் முந்தைய நாட்களில் அத்தனையாய் வலியுறுத்தப்படவில்லை. சாத்தான் ஆதாமையும், ஏவாளையும் ஒருவரை ஒருவர் வெறுக்கும் அளவுக்கு கொண்டு வந்தது உண்மை. அது ஆரம்பத்திலேயே நடந்து விட்டது. ஆயினும் இதை வலியுறுத்திப் பேசுவது குறைவாக இருந்தது. ஆனால் இன்றைய சூழ்நிலையில் அதை புரிந்து கொண்ட கூட்டம் மிகுதி. வாழ்க்கையின் தாம் உயர்ந்து வரும் இந்நாட்களில், உலகமயமாக்கப்படும் காரியங்கள் (Globalisation) பெருகி வரும் நாட்களில் உடைபட காத்திருப்பது குடும்ப வாழ்க்கையே. அனைத்த சாக்கடை சமாச்சாரங்களும் பிள்ளைப் பருவத்திலேயே அறைக்கும் கொண்டு வரப்பட வாய்ப்புகள் உள்ள இந்நாட்களில், குடும்பத்தை போற்றி பாதுகாப்பது மிகவும் இன்றிமையாததாகி விட்டது. மாறிவிட்ட இந்த சகாப்தம் நம்மிலேயும் பலரின் கவனத்தை திருப்பிவிட்டு விடும். இன்றைய குரல் “நானும் என் வீட்டாரும் அவரையே சேவிப்போம்” என்று மாற மிகவும் அவசியம் உண்டு. இது எல்லா இறைமக்களாலும் சொல்லப்பட வேண்டிய ஒன்று.

மூன்றாவதாக முறையிடுவதும், முறுமுறுப்பதும் மோசேயின் நாட்களில் சாதாரணம். உணவுக்காக, தண்ணீருக்காக, வழிக்காக, தலைமைக்காக எத்தனை எத்தனை அற்ப காரியங்கள் அவர்களை முறுமுறுக்கச செய்திருக்கிறது. மோசேயும் பதறிபேசும் அளவுக்கு – அவனை கானானுக்குள் போகவிடாது செய்து விடும் அளவுக்கு – மிஞ்சிப் போயிருந்தது. ஆனால் யோசுவாவின் நாட்களிலோ அது அறவே இல்லை. சொல்லப்போனால் பங்கு பிரிக்கும் யோசுவாவின் நாட்களிலோ அது அறவே இல்லை. சொல்லப்போனால் பங்கு பிரிக்கும் யோசுவாவின் நாட்களில் அல்லவோ அவை அதிகம் இருந்திருக்க வேண்டும். காரணம் “தேசத்தை சுதந்தரிக்க வேண்டும்” என்ற மாறாத சிந்தை “வாக்குத்தத்தம் செய்யப்பட்ட காரியங்களை அடைய வேண்டும்” என்ற மும்முரம், “வெற்றி பெற்றே ஆகவேண்டும்” என்ற தீவிரம் ஆகியவை முறுமுறுப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது. இன்றைக்கும் சபையில், தேவ மக்கள் மத்தியில், எத்தனை முறுமுறுப்பு, எத்தனை முணக்கம், எத்தனை எதிர்ப்பு, எத்தனை கூச்சல்கள். இதை முடித்து வைக்க அல்லது இதற்கு முடிவு கட்ட இன்றைய தேவை, அன்றைக்கு யோசுவாவின் காலத்தின் காணப்பட்ட அதே வாசகங்களே.

தேசத்தை சுதந்தரிக்க வேண்டும்
வாக்குத்தத்தம் செய்யப்பட்டவைகளை அடைய வேண்டும்.
வெற்றி பெற்றே ஆக வேண்டும்.
அனைவருக்கும் சுதந்தரம் வேண்டும்.
எல்லாருக்கும் இணையாக பங்கு உண்டு.

இச்சிந்கைகள் பெருகுமானால் தரிசனம் பரமதரிசனமாகும். விளைவுகள் விரிந்து பெருகி பெருத்த அறுவடைக்கு நம்மை ஆயத்தப்படுத்தி விடும். பொறாமை, பொருமுதல் மாறி செயல்பாடு அதிகரிக்கும்.

நான்காவதாக,”மன்னா” பொழிந்த காலம் மோசேயின் காலம். அது அவர்களை உயிரோடு வைப்பதற்கான தேவ ஏற்பாடு. இன்றைய சூழ்நிலையில் அது வெளியே இருந்து வரும் உதவிகள். யோசுவாவின் காலமோ சுதந்தரித்த தேசத்தின் நன்மைகளை அனுபவிக்கும் காலம். வெளிநாட்டு உதவிகளை சார்ந்து செயல்படும் காலம் மாறி, உள்நாட்டு காரியங்கள் பெரிதும் துணையாய் நிற்க, செயல்படும்

ஜனக்கூட்டம். “அவர்கள் தேசத்தின் கனியை புசித்த மறுநாளிலே மன்னா பெய்யாமல் ஒழிந்தது” (யோசுவா.5:12) வெளிநாட்டு மிஷனரிகளை நாம் கண்ட இடத்தில் இந்திய ஊழியர்கள் இடமாற்றத்தைக் கொண்டு விட்டார்கள். இந்தியப் பணம் இன்றைக்கு ஊழியப் பாதையில் மாற்றத்தைக் கொண்டு வந்து விட்டது. பொறுப்புணர்வு பெருகிவிட்டது. இந்திய தலைமை அநேக ஊழியங்களை தெளிவான பாதைக்கு கொண்டு வந்து விட்டது. இந்த சகாப்தம் - இதைத் தான் யோசுவாவின் சகாப்தம் என்று நான் சொல்லுகிறேன். (Joshua Dispensation)

ஐந்தாவதாக, மோசேயின் நாட்களில் ஒரு கோத்திரம் மற்ற கோத்திரத்தைக் குறித்து கவலை கொள்ளவில்லை. ஆனால் யோசுவாவின் நாட்களிலோ ஒருவருக்காக ஒருவர், ஒரு கூட்டத்தாருக்காக மற்ற கூட்டத்தார் கவலை கொண்ட காட்சி மறக்க முடியாதது. “கர்த்தர் உங்களை இளைப்பாறப் பண்ணி இந்த தேசத்தை உங்களுக்குக் கொடுத்தாரே”. எனவே நீங்கள், உங்களைப் போல் அவர்களும் சுதந்தரித்துக் கொள்ளும் மட்டும் அவர்களுக்கு உதவி செய்யக் கடவீர்கள். (யோசு.1:13, - 15) என்பது அழைப்பு. நீர் எங்களுக்கு கட்டளையிடுகிறதையெல்லாம் செய்வோம், நீர் எங்களை அனுப்பும் இடமெங்கும் போவோம். (வ.16) இது மறுமொழி. இன்றைய யோசுவா சகாப்தம் இதைத்தான் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறது.

…ஒன்று சேர்ந்து நாம் துதிப்போம்
சாத்தானை மிதிப்போம்
தேசத்தை சுதந்தரிப்போம்…